**கலவான பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 20 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் கலவான பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ஏக்கர் வரி ரூபா 16,799 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | நிலுவை ஏக்கர் வரி மீதியை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 41,657 ஆன கடன் கொடுனர் மேலதிக ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டு இறுதிக்கான கடன் கொடுனர் மீதி சரியாக காட்டப்படல் வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீர்செய்ய குறித்துக் கொண்டேன். |
| (இ) | உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட ரூபா 18,210 தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் செலுத்தலாக குறிப்பிடப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய கடன் மீதி அப் பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மீதி உருதிப்படுத்தல் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் தேசிய | குறித்த சீராக்கம் செய்யப்பட்டு சரியான கடன் மீதிகள் கணக்கிடப்பட வேண்டும். | பதிவேடுகளை பரீட்சித்து சீர்செய்ய குறித்துக் கொண்டேன். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீதியில் ரூபா 1,411,932 ஆன வேறுபாடு நிலவியது. | | |
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் 13 கணக்கு விடயங்களில் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் மீதிகள் மற்றும் பயன்பாட்டுப் பதிவேடுகளின் படி மீதிகள் இடையில் ரூபா 23,634,314 ஆன வேறுபாடு ஆனது. | குறித்த வேறுபாடுகளை இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (உ) | கூட்டுத் தொகை ரூபா 273,361 ஆன 3 கணக்கு விடயங்களை சான்றுரிதியிட தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | தேவையான விபரமான தகவல்கள் சமர்பிக்கப்பட வேண்டும். | இக் கணக்குகள் தொடர்பான விபரங்களை கண்டறிந்து சமரப்பிக்க குறித்துக் கொண்டேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 260 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 6,041,023 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 3,385,155 | 3,257,175 | 3,523,564 | 3,187,549 | 3,927,856 | 3,043,821 | 3,194,633 | 3,903,524 |
| (ii) | வாடகை | 3,200,250 | 5,299,846 | 5,132,945 | 5,108,105 | 6,317,300 | 4,016,018 | 4,067,850 | 5,082,076 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 528,680 | 481,940 | 481,940 | - | 3,372,051 | 542,185 | 471,185 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 37,491,818 | 30,628,384 | 34,899,166 | 13,893,730 | 9,218,437 | 8,583,336 | 1,510,087 | 16,536,420 |

### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதியன்று நிலுவை வீத வரி ரூபா 1,853,538 ஆனதுடன், அதனுள் 05 ஆண்டுகளை விஞ்ஞிய 74 வீத வரி அலகுகளில் ரூபா 661,493 அறவிடப்பட வேண்டி நிலவின. | நிலுவை வருமானத்தை அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் | எதிர்காலத்தில் நிலுவை வீத வரி அறவிட புதிய வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 486,951 ஆனதுடன், அதனுள் 05 ஆண்டுகளை விஞ்ஞிய 187 அலகுகளில் இருந்து ரூபா 156,631 அறவிடப்பட வேண்டி நிலவின. | நிலுவை வருமானத்தை அறவிட முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும். | இது வரை வருமானப் பரிசோதனை அலுவலர்னை |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2009 மார்ச் 09 ஆம் திகதிய மற்றும் இலக்கம் 2009/01 கொண்ட உள்ளுராட்ச்சி ஆணையாளரின் சுற்றறிக்கை 1.5 உப பிரிவிற்கு மாற்றமாக புதிய கட்டிடத்தின் கடையறை வாடகை திருத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் கடையறைகளிலிருந்து குறைந்த வாடகை அறவிடப்படுவதனால் மீளாய்வாண்டில் 20 கடையறைகளிலிருந்து ரூபா 188,100 ஆன தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட்டு புதிய பெறுமதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொது சந்தை கடையறை கடை வாடகை திருத்துவதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய மதிப்பீடு கிடைத்த உடன் கடைவாடகை திருத்தப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2007 ஆம் ஆண்டின் பின்னர் பழைய பொது சந்தையின் 16 கடையறைகளிற்கான கடைவாடகை திருத்தப்பட்டிருக்காததுடன், முறையான ஒப்பநதங்களின்றி வழங்கப்பட்டிருந்த கடையுரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட திறவுப் பணம் தொடர்பாக எவ்வித தகவலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கடையறை மதிப்பீடு முறையாக ஒப்பந்தத்திற்கு உற்படுத்த வேண்டும். | முன் செலுத்தப்பட்ட பணம் தொடர்பான தகவல்களை கண்டறிந்து எதிர் காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். இக்கடையறைகளிற்காக புதிய மதிப்பீட்டை பெற்று அதன் படி பணம் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டம் பிரகாரம் சபை எல்லையில் அமைந்துள்ள சுற்றுலா துறை சபையில் பதிவு செய்யப்பட்ட 2 ஹோட்டகளின் வருமானத்தின் 01 சதவீத | குறித்த கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க | சுற்றுலா துறை ஹோட்டள்களை இனங்கண்டுள்ளதுடன் அவற்றில் ஓர் நிருவனத்திலிருந்து 01 சதவீத கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்களிலிருந்து 01 |

| | | |
|---|---|---|
| கட்டனத்தை அறவிட சபையிற்கு இயலாமலிருந்தது. | வேண்டும். | சதவீத கட்டணத்தை பெற்றுக்கொள்ள எழுத்து மூலம் அறிவூட்டப்பட்டுள்ளது. |

### 2.2.5 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாணசபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு சபைக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 972,292 ஆனது. | சுபையிற்கு அறவிடப்பட வேண்டிய வருமனம் தாமதமின்றி சேர்க்கப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண பட்டோளை தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு இறுதி 04 மாதங்களிற்காக பெற வேண்டிய நீதி மன்ற தண்டப்பணம் நிதி கூற்றுகளை தயாரிக்கும் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அடைய எதிர்பார்க்கும் நீண்ட கால இலக்குகள் மற்றும் நோக்கங்களை இனங்கண்டு நான்கு ஆண்டுகளுக்கான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை . அவ்வாறே செயல் நடவடிக்கை திட்டத்தில் உரிய கால எல்லையினுள் துணை செயல் நடவடிக்கையின் கீழ் சேகரிக்க எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் அபிவிருத்தி துணை செயல் நடவடிக்கையின் கீழ் மீளாய்வாண்டில் இறுதி 04 மாதங்களினுள் செயற்படுத்த எதிர்பார்க்கப்பட்ட வேலைகளை குறிப்பாக இனங்கண்டிருக்கவில்லை. | சபையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு முறையான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று மற்றும் நான்கு ஆண்டுகளுக்கான அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | சுட்டிக்காட்டியுள்ள குறைபாடுகளை சீர் செய்து 2019 ஆண்டில் நான்கு ஆண்டு அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |

(ஆ) **எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் பாதீட்டினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 15,950,000 ஆன 25 அபிவிருத்தி கருத்திட்டங்கள் போதிளவு பணம் கிடைக்காததனால் நடைமுறைபடுத்த இயலாமலிருந்தது. | பாதீடிற்குடபட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தேவையான நிதியை பெற்றுக் கொள்ள சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | அபிவிருத்தி கருத்திட்டங்கள் மேற்கொள்வதற்கு போதியளவு பணம் கிடைத்திருக்கவில்லை. |
| (ii) | சபை அதிகார எல்லையில் அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த 14 மக்கள் கோரிக்கைகளுக்காக பணம் தாமதமாக கிடைத்ததனால் நடைமுறைபடுத்த சபைனால் இயலாமலிருந்தது. | பிரதேசத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பாக மக்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற சபை கூடிய கவனம் செலுத்த வேண்டும். | பேற வேண்டிய முத்திரை கட்டணம் 2018 ஆண்டின் இறுதி மாதத்தில் கிடைத்ததனால் வேலைகளை செய்வதற்கு போதியளவு காலமொன்று இல்லாமை. |

(இ) **கழிவுப் பொருள் முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறையான கழிவுப் பொருள் முகாமை கருத்திட்டமொன்றை செயற்படுத்தாது சபையினால் சேகரிக்கப்படும் உக்கலடையும் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்கு அகழிகள் வெட்டுவதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 288,237 ஆன செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முறையான கழிவுப் பொருள் முகாமை நிகழ்சித் திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைபடுத்த வேண்டும். | கழிவுப் பொருள் முகாமை நிலையம் ஒன்றிற்கு மற்றும் கொம்போஸ்ட் உற்பத்தி கருத்திட்டம் ஒன்றிற்காக மதிப்பீட்டு தயாரிக்கப்பட்டு சுற்றாடல் அமைச்சின் பிலிசரு கருத்திட்டத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான அங்கீகாரம் கிடைத்தவுடன் நிர்மானிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

(ஈ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கங்களிற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் | நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்சி நிரலிற்கு இனங்கி நீண்ட கால திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். | இது வரை சபை அதிகார எல்லையில் பொது மக்களின் நிலைபேறான அபிவிருத்திக்காக, 3 நோக்கங்களின் கீழ் சில நிகழ்ச்சிகள் திட்டமிட்டு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளன. மீதி 14 அபிவருத்தி |

| | | |
|---|---|---|
| சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2018 திசெம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | நோக்கங்களிற்காகவும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்குவதற்கு எதிர்பார்கப்படுகிறது. |

## 3.2 மனித வள முகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றம் பெற்று சென்ற ஐந்து அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 41,954 ஆனது. | நிலுவை கடன் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை தொகையை செலுத்துமாறு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.3 பெறுகைகள்

### ஒப்பந்த நிருவாகம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுபிடிய வித்தியாலயத்தின் கரப்பந்தாட்டரங்கை சுற்றி வலை மூலம் கவசமிட மற்றும் மின்சாரம் பெற்றுக்கொள்ள வழங்கப்பட்டிருந்த ரூபா 194,895 ஆன ஒதுக்கீடு போதாமையினால் விளையாட்டு அரங்கின் ஒரு பகுதி வலை மூலம் மூடப்பட்டிருந்தது. விளையாட்டு அரங்கிற்கு மின்சாரம் பெறப்பட்டிருக்காததன் காரணமாக எதிர்பார்கப்பட்ட நோக்கம் நிறைவேறி இருக்கவில்லை. | வேலைகள் மூலம் அடைய எதிர்பார்கப்படும் நோக்கங்களை அடைந்து கொள்ள செயற்பட வேண்டும். | குறித்த வேலையின் பெயர் ‘‘பொதுபிடிய வித்தியாலய கரப்பந்தாட்டரங்கை சுற்றி வலை அடித்து தயார் செய்தல் மற்றும் மின்சாரம் பெற்றுக்கொடுத்தல்’’ என பெயரிட்டு மேற்பார்வைக்காக எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதும், அதற்காக ரூபா 200,000 ஒதுக்கப்பட்டிருந்தது. அப் பணம் போதாமையினால் வழங்கப்பட பணத்தில் அவ்வித்தியாலய அதிபரின் வேண்டுகோளின் பிரகாரம் ஒரு பகுதியிற்கு மாதிதிரம் வலை அடிக்கப்பட்டது. |
| (ஆ) | பாதைகளை கொங்கிரீட் இடும் 06 வேலைகள் தொடர்பாக மற்றும் கங்கலகமுவ விளையாட்டு அரங்கை ஒளிபெறச் செய்யும் வேலையின் 03 வேலை விடயங்கள் தொடர்பாக ரூபா 43,554 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | கூடுதல் செலுத்துகை மீள் அறவிடப்பட வேண்டும். | குறித்த வேலைகளிற்காக கூடுதலாக செலுத்தப்பட்டதாக குறிப்பிடப்படும் ரூபா 39,185 இனை நிறுத்தல் பணத்திலிருந்து அறவிட மற்றும் மீதித் தொகையான ரூபா 4,369 இனை குறித்த சங்கத்திடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 20 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 8,065,000 ஆன மொத்த ஒதுக்கீடும் மீதியாக இருந்தது. | திட்டமிடளுக்கமைய ஏற்பாடுகளை ஒதுக்க வேண்டியதுடன், அவ் ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | கொடுப்பனவு உறுதிச்சிட்டு தயாரிகையில் அங்கு செலவின தலைப்பை சரியாக குறிப்பிடாதமை மற்றும் 2018 ஆண்டு அங்கத்துவ சபை நியமனம் ஏப்ரல் மாதத்தில் இடம் பெற்றமை செலவின தலைப்புகளில் ஒதுக்கீட சேமிப்பிற்கு தாக்கம் செலுத்தியுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 15 செலவின விடயங்களிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 6,524,400 ஆன மொத்த ஒதுக்கீட்டில் 41 முதல் 98 சதவீதம் வரை வீச்சலவான வீதத்தில் சேமிப்பாக இருந்தது. | திட்டமிடளுக்கமைய ஏற்பாடுகளை ஒதுக்க வேண்டியதுடன், அவ் ஏற்பாடுகளை பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும். | 2018 ஆண்டு புதிய அங்கத்துவ சபை நியமனம் ஏப்ரல் மாதத்தில் இடம் பெற்றமையினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கீடு 04 மாத கால அளவு குறைவாக செலவானமை காரணமாக ஒதுக்கீடு சேமிக்கப்பட்டுள்ளது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | 2019 ஆண்டிற்காக உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நிறுவப்பட்டு நடாத்திச் செல்லப்படும். |